# புலிகள் வெளியேற்றப்படுவர் ஏனைய குழுக்கள் தங்க அனுமதி

## - ஜெயலலிதா

[சென்னை]
தமிழகத்திலிருந்துவிடுதலைப் புலிகளை உடனடியாக வெளியேற்றுவதே தமது முதல் நடவடிக்கை என தமிழகத்தின்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 83 | ஆனி 8 | துல்ஹஜ் 9 | இதழ் 131

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 22-06-1991

## தற்கொலைப்படை தாக்குதலை கட்டுப்படுத்துவது கடினம்

(கொழும்பு)
தற்கொலைப் படைத் தாக்குதல் சம்பவம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் அதனைத் தடுப்பது மிக சடினமாயிருக் கு மெ ன நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் அதிகாரி ஒருவர்

(4ம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை பாதிக்கப்படும் - பிரட்மன்

[கொழும்பு]
கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பிற்கு விடுதலைப் புலிகள் காரணமாயிருந்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் 'சமாதானப் பேச்சு' முயற்சிகள்

[4ம் பக்கம் பார்க்க]

# ★ கொழும்பு பாதுகாப்பு தலைமை அலுவலகத்தில் தற்கொலைப்படை தாக்குதல்

# 70க்கும் மேற்பட்டோர் பலி!

## 40 இராணுவம் உயிரிழப்பு; 200 பேர் காயம்; 100 வீடுகள் சேதம்!

## முப்படைகளையும் உஷார் நிலையில் இருக்குமாறு ஜனாதிபதி உத்தரவு!!

(கொழும்பு)

கொழும்பு ஏர்னஸ்ட் டீ சில்வா மாவத்தையிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைப் பிரிவு தலைமையகத்தில் நேற்று பாரிய குண்டு ஒன்று வெடித்ததில் எழுபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக தெரியக்கப்பட்டது. இதில் 40 பேர் படையினர் எனவும், எஞ்சியோர் பொதுமக்கள் எனவும் இதில் 200க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. இந்தக் குண்டுவெடிப்புக்கு காரணம் தற்கொலைப் படைத் தாக்குதலே என்றும் அறிவிக்கப்பட்டது.

கொழும்பில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் இது இரண்டாவது மிகமோசமான ஒன்று என தெரிவிக்கப்பட்டது. 70 கிலோ கிராம் நிறையுள்ள வெடிமருந்துகளைக்கொண்டதாக இந்தக் குண்டு இருந்ததாகவும் குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்தில் 10 அடி விட்டமும் 10 அடி ஆழமும் கொண்ட ஒரு பாரியகுழியும் ஏற்பட்டுள்ளது'

## குண்டுடன் வந்த வான்

நேற்றுக் காலை சுமார் 9-45 மணியளவில் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை பிரிவு தலைமை அலுவலகத்தினுள் வான் ஒன்று நுழைய முற்பட்டது. எனினும் தலைமையகத்தின் வாசல் பலமான இரும்புக் கதவுகளால் மூடப்படிருந்ததாலும், பலத்த காவல் இருந்ததாலும் அது உள்ளே செல்லமுடியாத நிலை ஏற்பட்டது உடனடியாக வானை ஓட்டி வந்த சாரதி கட்டிடத்திற்கு வெளியிலேயே வீதியின் அருகில் அமைந்துள்ளகேற்றின் முன்னால் வானுக்குள் இருந்து 'சுவிச்' ஒன்றை இயக்கி தமது ஆசனத்தின் கீழிருந்த அதி சக்தி வாய்ந்த குண்டை வெடிக்கவைத்தார்.

## 70க்கும் மேற்பட்டோர் பலி

இச்சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பின் காரணமாக மேற்படி தலைமையக வளவினுள் இருந்த 40 இராணுவத்தினரும், வீதியில் சென்றோரும்,பஸ்வண்டிகளில் சென்ற 30 பேருமாக சுமார் 70 பேர் கொல்லப்பட்டனர். இராணுவத்தினர் மற்றும் வீதியில் சென்றவர்கள், அருகிலிருந்த வீடுகளிலிருந்தவர்கள் உட்பட 200 பேர் படுகாயமடைந்தனர்.

## 100 வீடுகள் சேதம்

இச்சம்பவத்தில் 20 வீடுகள் முற்றாக தகர்க்கப்பட்டன. 30 வீடுகள் பெருமளவு சேதத்துடன் 100 வீடுகள் சேதமடைந்தன. இராணுவ தலைமையக முன்புறம் முற்றாக சேதமடைந்ததுடன் கட்டிடம் பலத்த சேதமடைந்தது.

## பஸ்கள், கார்கள் சேதம்

இச்சம்பவத்தின் போது பாதுகாப்பு தலைமையலுவலகத்தினுள் இருந்த அனைத்து வாகனங்களும் முற்றாக அழிக்கப்பட்டன. வீதியால் சென்று கொண்டிருந்த 20 பஸ்கள் கார்கள் உட்பட பல வாகனங்கள் பெருமளவு சேதமடைந்தன.

வாகனங்கள் நீண்டநேரம் எரிந்து கொண்டிருந்ததை காணக்கூடியதாயிருந்தது. இவ்வாகனங்களில் பிரயாணம் செய்த பலர் தீயினால் கருகிய நிலையில் அடையாளம் காணமுடியாது போயுள்ளனர். வாகனங்களில் ஏற்பட்ட தீயை அணைக்க தீயணைப்பு படையினர் பலமணிநேரம் போராட்டம் நடாத்தினர்கள்.

சம்பவம் நடைபெற்ற உடனே பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் ஸ்தலத்திற்கு வந்த போதும் அதிர்ச்சியின் காரணமாக அவர்கள் நிலைகுலைந்து போய் பாதுகாப்பு கடமைகளைக் கூடமேற்கொள்ள முடியாத நிலையில் இருந்ததை காணக்கூடியதாயிருந்தது.

சிதைவுற்ற வாகனங்களின் பல பகுதிகள் பல மீற்றர் தூரத்திற்கப்பால் மின்வயர்களிலும் தொலைபேசிவயர்களிலும் கட்டிடங்களிலும் தொங்கியவாறிருந்தன.

(4ம் பக்கம் பார்க்க)

## வெலி ஓயா மோதலில் 6 வேங்கைகள் வீரமரணம்

(முல்லைத்தீவு)
வெலிஓயாவில் சிறீலங்கா இராணுவத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அண்மையில் நடைபெற்ற மோதலில் 6 வீரவேங்கைகளும், ஒரு துணைப்படை வீரரும் வீரமரணம் அடைந்தனர்.

வீரமரணமடைந்த போராளிகள் விபரம் வருமாறு: கப்டன் சுபாஷ் (அன்ரனிபோல்-என். சி. சில்வெஸ்ரர், தம்பலகாமம்), லெப். சலீம் (குமாரசிங்கம் ரவிச்சந்திரன், மட்டக்களப்பு), 2-வது லெப். காபன்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் மிதிவெடியில் சிக்கியது!

(ஊர்காவற்றுறை)
காரைநகரிலிருந்து விசைப்படகில் சுருவிலில் வந்து இறங்கிய இராணுவத்தினர் சுருவிலில் கரையோரத்தில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்தனர். இதனைத்தொடர்ந்து சுருவிலிலுள்ள தணுவில் முகாமிலிருந்து இராணுவத்தினர் தொடர்ச்சியாக கலிபர் ஷெல் தாக்குதலை நடாத்தியதாக தெரியவருகிறது. (59)

## யாழ். நகர் நோக்கி ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றிரவு சுமார் 7-30 மணியளவில் தொடர்ச்சியாக ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் பலத்த சத்தத்துடன் வீழ்ந்து வெடித்துள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவ் பிரதமராக பதவியேற்றார்

(புதுடில்லி)
பிரதமர் திரு. பீ வி. நரசிம்மராவ் தலைமையிலான 57 பேரைக்கொண்ட மத்திய அமைச்சரவை நேற்று பதவியேற்றது தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு பேர் இணைய மைச்சர்களாக இந்த புதிய அமைச்சரவையில் இடம்பெற்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

மலை வேம்பு விதைகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ-1395)

### "மீரா" நாவல்கள்

இனவிடுதலையை மையமாக வெளிவந்துள்ளவை, 'சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள்' விற்பனையாகின்றது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னுகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (சி 4878)

### C. C. C.

இன்று 22 - 06 - 91 மாலை 2 மணிக்கு Apprentice in Pharmacy வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி உரிமையாளர், C. C. C கிளினிக், 514/16, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (ஏ 1396)




வலிகாமம்-வடக்கு இடம்பெயர்ந்தோர் சார்பில் மகஜரை, யாழ். மேலதிக அரச அதிபர் திரு. எஸ். சண்முகநாதனிடம் கையளிப்பதையும், வலி-வடக்கு புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் உரையாற்றுவதையும், ஊர்வலத்தில் வந்த மக்கள் சிலர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி திரு. பிறட்றிக்குடன் உரையாடுவதையும் படங்களில் காணலாம். (படம்: தேவா)

## இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு தினமும் இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும். கல்விப்பணிப்பாளர் ஆர் சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளும் மேற்படி வைபவத்தில் பேராசிரியர் பொ. பாலசுந்தாம் பிள்ளை [கலைப்பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்) நிறுவுநர் நினைவுரை ஆற்றுவார்.

## மாகாணத் திணைக்களங்களுக்கு தனியான கணக்குப் பிரிவு

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் மாகாண சபையின் கீழ் இயங்கும் திணைக்களங்களுக்குத் தனியான கணக்குப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரிவுக்குப் பொறுப்பாக வி. எஸ். கனகரத்தினம் புதிய கணக்காளராக வடக்கு-கிழக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக மாகாண மத்திய அரசின் கீழ் வரும் கணக்குகளை யாழ். செயலகத்தின் பிரதான கணக்காளர் ஒருவர் செய்துவந்தார் தற்போது செயலக ஊழியர்களின் சம்பளமும் மாகாண சபையின்கீழ் பணிபுரிபவர்களுக்கு வேறுகவும் மத்திய அரசின் கீழ் பணிபுரிபவர்களுக்கு வேறுகவும் வழங்கப்படுகின்றது. (71)

## நொக்கவுட் உதைபந்தாட்டம்: சென். மேரிஸ் - பாடும்மீன் இறுதியாட்டத்தில் மோதும்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக், விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இறுதி ஆட்டம் இம்மாதம் 26-ம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி இறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென் மேரீஸ் கழகமும், குருநகர் பாடுமீன் கழகமும் போட்டியிடும்.

கடந்த வாரம் சென். மேரீஸ் கழகத்துக்கும், சென். ரேக்ஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் சென். மேரீஸ் கழகம் 3-1 கோல்களால் வெற்றி பெற்றது.

பாடுமீன் கழகத்துக்கும் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு அரை இறுதியாட்டத்தில், பாடுமீன் கழகம் 3 0 கோல்களால் வெற்றிபெற்றது. (வி)

## உற்பத்தி பொருள்கள்

(மானிப்பாய்)

தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்தி சங்கத்தினர் வாழை நாரையும், பனம் பொருளையும் மூலப்பொருளாகக் கொண்டு பல உற்பத்திப் பொருள்களைச் செய்துவருகின்றனர். (71)


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## கரபந்தாட்டப் போட்டி: யாழ்ப்பாணம் - கோப்பாய் சாம்பியனுகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவிஅரச அதிபர் பிரிவுகளிடையேநடாத்தப்பட்டுவந்த கரபந்தாட்டப் போட்டியில், ஆண்கள் பிரிவில் கோப்பாயும், பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணமும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன

அரியாலை சனமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற மேற்படி இறுதிப்போட்டிக்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் எஸ். ஐ. நித்தியானந்தராஜ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினுர்.

ஆண்கள் பிரிவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கோப்பாய் கோஷ்டி, தெல்லிப்பழை கோஷ்டியை 9-15, 15-5, 15-13, 15-13 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு கே. ராஜரட்ணம், கே. நாகேந்திரம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணக் கோஷ்டி, உடுவில் கோஷ்டியை 15-0, 7-15, 15-9, 11-15, 15-9 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு டி. ஏ. எம் குணசிங்கம், எஸ். வைரமுத்து ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (வி)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை இலந்தைத்திடன் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. 10 நாட்களுக்கு இடம்பெறும். இவ் உற்சவம் ஆரம்ப பிரதமகுரு சிவஸ்ரீ சி. சிதம்பரநாதர் குருக்கள் தலைமையில் நடைபெற்று 10-ம் நாள் 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவுபெறும்.

## பாலியல் வன்முறை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்ட பாலையடிவெட்டையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அவ்விடத்திலுள்ள வீரசிங்சம் இதயம் (16 வயது) என்னும் பெண்ணை பாலியல் வன்முறைக்குள்ளாகியுள்ளனர்.

## இன்று

(மானிப்பாய்)

வலி தென்மெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் பாலர் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக நடாத்தும் நாடகவிழா நாளை ஞாயிறு மாலை 6-30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவின் நிகழ்ச்சிகளை தமிழீழ பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை திரைநீக்கம் செய்துவைப்பார், பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவிகலாலா கலந்து கொள்ளும் இவ் வைபவத்தில் விடுதலைப புலிகள் மக்கள் முன்னணி முக்கிய பிரமுகர்களின் கருத்துரைகளும் சனசமூக நிலையங்களின் நாடகங்களும் இடம்பெறும். (71)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் ஐயனுர் ஆலய சங்காபிஷேக விஞ்ஞாபனம் இன்று காலை 7-00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. 1008 சங்கு அபிஷேகமும், பகல் அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறும். இதைத் தொடர்ந்து மாலை 5-00 மணிச்கு ஐயனுர் பெருமானுக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.

விசேட நிகழ்ச்சிகளாக மேளக் கச்சேரி, பொன். சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரி அகில இலங்கை கம்பன்கழகத்தின் பட்டிமன்றம், சாந்தன் கோஷ்டியினரின் எழுச்சிப் பாடல்களும் இடம்பெறும்.


# இன்று
# மாபெரும்
# இசைமாலை நிகழ்ச்சி

(இடம்பெயர்ந்தோர் வீடமைப்பு நிதிக்காக சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடாத்துகிறது)

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானம்

காலம்: 22-06-91 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு

நிகழ்ச்சிகள்

★ இந்த மண் எங்களின் சொந்தமண் புகழ் சாந்தன் இசைக்குழுவின் **இன்னிசை நிகழ்ச்சி**

★ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் வழங்கும் **"களத்தில் காத்தான்"**

பிரவேசம்:- 100/-, 10/-, மாணவர்களுக்கு 5/- மட்டும்.

(ஏ-1386)


## யாழ். கல்வி மாவட்ட தமிழ்த்தினப் போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வி மாவட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இம்மாதம் 28-ம், 29-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வாசிப்பு, எழுத்து, கட்டுரை ஆக்கம், பேச்சு, பா ஓதல், இசை, நடனம், நாடகம், பல்லியம், வில்லுப்பாட்டு/கதாப்பிரசங்கம், இசை இடையிட்ட உரைச்சித்திரம், நடன நாடகம்/நாட்டுக்கூத்து, இசை நாடகம் ஆகியவற்றில் இப்போட்டிகள் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 118 பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

நெருக்கடிக்குப்பின் ஏற்படக்கூடிய தாக்கங்கள் சம்பந்தமான ஆசிரியர் கருத்தரங்கு 28ந் திகதி காலை நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

## இராசி பலன்

22-06-1991
சனிக்கிழமை

ஏகாதசி: பின்னிரவு 2-48 வரை.

சுவாதி: பின்னிரவு 4-32 வரை.

அமிர்தசித்தம், இராகு காலம்: காலை 8-54 முதல் 10-24 வரை.

சுபநேரம்: பகல் 2-54முதல் 4-24 வரை.

மேடம்: வியாபார தந்திரம், குடும்ப மகிழ்ச்சி, காரிய பாரம்.

இடபம்: அதிகாரிகள் புகழுரை, வாக்குவாதம், தொழில் சிறப்பு.

மிதுனம்: வாக்குக் கலகம். நண்பர்கள் துரோகம், பகை,

கடகம்; அரச பயம், பயணங்களால் தொல்லை, மறதி.

சிங்கம்: தொழில் லாபம், விருந்தினர் வருகை, மனக்களிப்பு.

(4-ம் பக்கம் பார்க்க)


வெளிநாட்டு தபால் துரித சேவைக்கு

# யாழ்ப்பாணத்தில்

C/o, Cosmos Marketing Services,

120, K. K.S, Road, Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

தாமதமின்றி அனுப்பிவைக்க இன்றே ஒப்படையுங்கள்

(எ-1394)

# அல்பிரட் துரையப்பாவின் கொலை சிங்கள அரசுக்கு பேரதிர்ச்சியானது!

**(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா மலரில் வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 'இரண்டு தசாப்தங்களும் புலிகளும்' என்ற கட்டுரை தொடர்ச்சியாக இங்கு தரப்படுகிறது.)**

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த விடாது தடுக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசு பகீரத முயற்சிகளைச் செய்தது. இறுதியில் சிங்களப் பொலிஸாரை ஏவி மாநாட்டைக் குழப்பியது இந்தச் சம்பவத்தில் 9 அப்பாவித் தமிழர்கள் கொலையுண்டார்கள். இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு சூத்திரதாரியாக விளங்கியவர் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா ஆவர். சுதந்திரக்கட்சியின் வடமாகாண பிரதான அமைப்பாளராக இயங்கிய துரையப்பா, அரசின் அடிவருடியாக இருந்து தமிழ்த் துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். தமிழ்த் தீவிரவாத இளைஞர்களை அரசுக்கு காட்டிக் கொடுத்தார். தமிழராய்ச்சி மாநாட்டிற்கு சிங்களப் பொலிஸாரை ஏவிவிட்டதற்கும் இவரே காரணகர்த்தாவாக விளங்கினார். இந்த இனத்துரோகியை அழித்து சிங்கள அரசுக்கு ஒரு பாடம் புகட்ட பிரபாகரன் முடிவுசெய்தார்.

இதற்கிடையில் தமிழராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளால் கொதிப்படைந்த சிவகுமாரன் அல்பிரட் துரையப்பாவையும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகராவையும் குண்டு வைத்து கொலைசெய்ய மேற்கொண்ட பகீரத முயற்சிகள் தோல்வியடைகின்றன. இதனால் பொலிஸாரால் தீவிரமாக வேட்டையாடப்பட்டு வந்த சிவகுமாரன் 1974 ஜூன் 5ஆந் திகதி வீரமரணத்தை தழுவிக்கொள்கிறான். விடுதலையுணர்வும், வியப்புமிக்க துணிச்சலும், விடாமுயற்சியும் கொண்ட மகத்தான ஒரு விடுதலை வீரனை இழந்து தமிழீழம் துயரில் ஆழ்ந்தது.

பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகள் திட்டமிட்டபடி செயலில் குதிக்கிறார்கள். தமிழினத்தின் பெரும் துரோகியான அல்பிரட் துரையப்பா 1975 ஜூலை மாதம் 27ஆந் திகதி பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு அருகாமையில் பிரபாகரனால் சுட்டுக்கொல்லப்படுகிறார்.

அல்பிரட் துரையப்பா கொலையுண்ட நிகழ்வு சிங்கள அரசுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது தமிழரின்போராட்டத்தைக் காட்டிக்கொடுக்க முயன்ற தமிழ்த் துரோகிகளுக்கு இச்சம்பவம் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது. சிங்களப் பேரினவாதக்கட்சிகள் தமிழீழத்தில் நிலைகொள்ள முனைந்தமுயற்சிகளுக்கும் இந்தச்சம்பவம் ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. சிங்கள இனவாத அடக்குமுறைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஆயுத எதிர்ப்பு இயக்கத்தின் முதலாவது அத்தியாயத்தை விடுதலைப்புலிகள் ஆரம்பித்து வைத்தனர். எழுபதுகளில் தமிழீழத்தை அதிரவைத்த முதலாவது ஆயுதப் போர் நடவடிக்கையை வெற்றிகரமாகச்செயற்படுத்தி, விடுதலையை நோக்கி நீண்ட கடினமான வரலாற்றுப்பயணத்தை தொடக்கி வைத்தார் பிரபாகரன்.

1970ஆம் ஆண்டு மே 5ஆம் நாள் புதிய தமிழ்ப் புலிகள் என்ற அமைப்பு 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இராணுவ அமைப்பையும் அரசியல் அமைப்பையும் ஒன்றிணைந்த ஒரு தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப்புலிகள் தமது வளர்ச்சிப்பாதையில் வீறுநடை போட்டனர். அன்று மலர்ந்துகொண்டிருந்த எமது விடுதலை இயக்கத்திற்கும் தமிழரின் தேசியப் போராட்டத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கியது தமிழ் பொலிஸ் உளவுப்படையாகும். இந்த உளவுப்படையுடன் சேர்ந்து சிங்கள அரசின் கைக்கூலிகளாக காட்டிக் கொடுப்போரும் இனத்துரோகிகளும் இயங்கினர், தமிழீத்தில் ஒரு ஆயுதப்போராட்ட அமைப்பு வளரவிடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியோடு எதிரியின் கைப்பொம்மைகளாக இவர்கள் செயற்பட்டனர். எனவே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால கெரில்லா நடவடிக்கைகள் பொலிஸ் உளவுப் படையை சிதைப்பதோடு, காட்டிக்கொடுக்கும் கயவர்களையும், இனத்துரோகிகளையும் அழிப்பதையே நோக்காகக்கொண்டிருந்தது.

பாராளுமன்றத்திற்குப் புறம்பாக தமிழீழத்தில் தலைவிரித்தாடிய அரசியல் வன்முறை எழுச்சியும், புலிகள் இயக்கமாக உருவகம்பெற்ற ஆயுத எதிர்ப்பு இயக்கமும் தமிழ் அரசியல் வாதிகளுக்கு அச்சுறுத்தலையும் நெருக்குதலையும் கொடுத்தது, பாலைவனத்தில் எழுப்பும் குரல்கள்போல பாராளுமன்றத்தில் விடும் அறிக்கைகளில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதை தமிழீழ மக்கள் உணர்ந்துகொண்டனர், சமஷ்டி கோரி நடத்திய சாத்வீகப் போராட்டங்களும் பயனற்றுப் போய்விட்டதையும் மக்கள் உணராமல் இல்லை. தீவிரமடைந்துசென்ற சிங்கள இனவாத ஒடுக்குமுறையும், அதன் எதிர்வீச்சாக தமிழீழத்தில் உருவாகியுள்ள புரட்சிகர புறநிலைகளும், ஒற்றையாட்சியை கைவிட்டு தன்னாட்சி உரிமையை வென்றெடுக்க வேண்டுமென மக்கள் மத்தியில் எழுந்துள்ள புதிய அரசியல் விழிப்புணர்வும் தமிழ் அரசியல்வாதிகள் மீது ஒரு புதிய அழுத்தத்தை ஏற்படுத்தியது.

ஒப்பந்தங்கள்செய்து, உடன்பாடுகள் செய்து, ஒத்துழைப்புச் செய்து, எல்லாவகையிலும் நெகிழ்ந்துகொடுத்தும் சிங்கள ஆளும் வர்க்கத்தால் மாறி மாறி ஏமாற்றப்பட்ட கசப்பான வரலாற்று அனுபவமும் தமிழ்த் தலைவர்களை உறுத்தியது. தமிழீழத்தில் மேலோங்கி நின்ற தன்னாட்சி உரிமைக் குரலுக்கு செவிசாய்க்க மறுத்தால் அது அரசியல் தற்கொலையில் முடியும் என்பதையும் அரசியல் தலைவர்கள் உணர்ந்தனர். இவ்வாறான வரலாற்று நிர்ப்பந்தங்களால் நெருக்கப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒத்திசைவாக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியரசுக்கோரிக்கையை முன்வைக்க முன்வந்தனர்.

1976ம் ஆண்டு மேமாதம் 14ம் திகதி வட்டுக்கோட்டையில் நிகழ்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் ''தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திரமான, இறைமையுடைய, மதசார்பற்ற சோசலிச தமிழீழத்தை அமைப்பது'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற தமக்கு ஒப்புதல் தருமாறு கோரி 1977 ஜூலையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கூட்டணியினர் தமிழ் மக்களை வேண்டிக் கொண்டனர், தேர்தலில் வெற்றிபெறும் உறுப்பினர்கள் தமிழீழதேசிய அரசியல்நிர்ணய அவையாகச் செயற்பட்டு தமிழீழ அரசுக்கான யாப்பு ஒன்றைத் தயாரித்து, தமிழீழத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டப் போராடுவோம் எனவும் கூட்டணியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனம் செய்தனர், சர்வசன வாக்கெடுப்புப்போல நிகழ்ந்த இத்தேர்தலில் தமிழீழ மக்கள் தமது அரசியல் அபிலாசை என்ன என்பதை தெள்ளத் தெளிவாக தெரியப்படுத்தினர். அமோக வெற்றியை ஈட்டிய கூட்டணியினர் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையை இங்கு விபரிக்கத் தேவையில்லை.

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை வெறும் தேர்தல் கோஷமாக கூட்டணியினர் பயன்படுத்தியமை தமிழீழ மக்களுக்கு இழைத்த மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும். தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமையான தன்னாட்சி உரிமையை கொச்சைப்படுத்தும் வகையில் கூட்டணியினர் அரங்கேற்றிய இந்த அரசியற் துரோக நாடகம் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பின்னடைவுக்குள் தள்ளியது.

1977 தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் பதவியேறிய ஜே ஆரின் ஆட்சிபீடம் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தபிரகடனம் செய்வதுபோல ஒரு பயங்கர இனக் கலவரத்தை கட்டவிழ்த்துவிட்டது. இந்த சிங்கள இனவாதப் பேயாட்டத்தில் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோதும் கூட்டணித் தலைவர்கள் செயலிழந்துபோய் தமது பாராளுமன்ற நாற்காலிகளை மட்டும் இறுகப்பற்றியபடி இருந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து கூட்டணித் தலைமை தமிழீழ அரசியல் அரங்கிலிருந்து முற்றாக அந்நியப்பட்டு நின்றது, இந்த வெற்றிடத்தை நிரப்புவதுபோல விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முனைப்புறத் தொடங்கியது. அரசின் அடக்குமுறை கருவிகளாக செயற்பட்டு, தமிழ் மக்களின் போராட்டத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கிய பல இரகசியப் பொலிஸ் அதிகாரிகளையும் துரோகிகளையும் எமது இயக்கம் அழித்தது.

[நாளை: புலிகள் எவ்வாறு பிரபல்யமடைந்தனர்?]

# "தந்தை தாய் சகலரும் ஆயுதம் ஏந்தி போரை முடிக்க முன்வர வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''தமிழீழத்தில் இன்று வரலாறு மாறிக்கொண்டிருக்கின்றது. ஒரு காலத்திலே நமது மண்ணில் வயது முதிர்ந்தவர்களைத்தான், அரசியல் தலைவர்கள் என்று பாராட்டினார்கள். வரவேற்பும், மாலைகளும் அவர்களுக்கே அளிக்கப்பட்டன. இன்று நிலைமை மாறிவிட்டது. எம்மை ஏமாற்றிய அந்த அரசியல் தலைவர்கள் நாட்டை விட்டே ஓடிவிட்டனர். இந்த மண்ணில் தலைவர் பிரபாகரன் தலைமையில் சரித்திரம் படைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.''

இவ்வாறு அண்மையில் ஆவரங்கால் மேற்கு அல்பேர்ட் அரங்கில் நடைபெற்ற 'றொக்கி'யின் 45வது நினைவுநாள் விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் கவிஞர் மு வே. யோ. வாஞ்சிநாதன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட பால்மணம் மாறாத பிஞ்சுகள் வீரத்துடன் நின்று நமது மண்ணைக் காக்கிறார்கள். தமது உயிர்களைத் துச்சமாக எண்ணி இந்த நாட்டுக்காகத் தியாகம் செய்துவருகின்றார்கள். இவர்களின் தியாகம், இமயமலையையும் விஞ்சிப்போகையில் நமது பெரியவர்கள் அஞ்சுவதைவிட்டு, அவர்களும் இந்தப் போராட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு சுதந்திரத்திற்கான போராட்ட அணியில் திரளவேண்டும்.

'றொக்கி' என்ற இந்தச் சிறுவன் தனது இளமைக் காலத்தில், ஆயுதமேந்தி நாட்டுக்காகப் போராடச் சென்று வீர மரணமடைந்தான். இவனுக்காக ஒரு விழா இங்கு நடைபெறுகிறது. இவனது பெற்றோர் கௌரவிக்கப்படுகிறார்கள். தலைவர்களுக்கு, வயது முதிர்ந்தவர்களுக்கு ஒரு காலத்தில் இம்மண்ணில் அளிக்கப்பட்ட அரசியல் கௌரவம், றொக்கி போன்ற இளம் பிஞ்சுகளுக்கு அவர்களின் தியாக வரலாறுகளுக்காக இன்று இம்மண்ணில் அளிக்கப்பட்டுவருகிறது.

''இந்த வரலாற்றை மாற்றியவர் எமது தலைவர் பிரபாகரன். வரலாறு மாறிக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் முதியவர்களும் ஆயுதம் ஏந்துவதில் தவறில்லை. லிபியாவின் புரட்சிப் போராட்டக் குழுவின் தலைவர் ஓமர் முக்தார் என்பவர் தமது முதுமை வயதிலும் ஆயுதம் ஏந்திப் போராடினார் என்றால் நமது தந்தையர் ஆயுதம் ஏந்துவதில் தயக்கமென்ன? இளமையிலே வீரமும், துடிப்பும் தான் முன்னணியில் இருக்கும். வயதுவந்தவர்கள் ஆயுதம் ஏந்தினால் வீரத்துடன் அனுபவமும், அனுபவத்துடன் நிதானமும் கூடவே இருக்கும்.

''எமக்கு முன்னோடியாக நமது தாய்தந்தையரும் ஆயுதம் ஏந்திப் போராட்டத்தை முடிக்க முன்வரவேண்டும் போராட்டத்திற்கு வயது இல்லை; ஆண் பெண் என்ற பேதமும் இல்லை தந்தைமார் என்ன? முடிந்தால் தாய்மார் கூடப் போராடலாம். ஜான்சிராணி மட்டுமல்ல; தஞ்சாவூர் அரண்மனையில் ஆட்சிசெய்த தமிழ்த்தாய்மார் பலரை வாள் கேடயத்துடன் கண்டவர்கள் தமிழர். அப்படியிருக்கையில் அனைவரும் இதை உணர்ந்து, எமது இளைஞர்களின் கரங்களைப் பலப்படுத்த ஆயுதம் ஏந்திப் போராட முன்வர வேண்டும்'' என்றார்.

# பஞ்சாப் மாநில தேர்தல் செப். 25-ல் நடைபெறும்

(சண்டிகார்)

பஞ்சாப் மாநிலத்தில் மூன்று மாதங்களுக்கு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கமிஷன் நேற்று அதிகாலை இந்த முடிவை அறிவித்தது.

வன்முறைகள் அதிகரித்துள்ள பஞ்சாப் மாநிலத்தில் இன்று தேர்தல் நடைபெறவிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த மாநிலத்திலுள்ள சகல லோக்சபா தொகுதிகளுக்கும், சட்டப்பேரவைகளுக்குமான தேர்தல்கள் செப்டம்பர் 25-ம் திகதி நடைபெறுமென்றும் செப்டம்பர் 30-ம் திகதிமுன்னர் இம்மாநிலத்தில் சகல வாக்குப் பதிவுகளும் இடம்பெறும் என்றும் தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது

பஞ்சாப்பில் தேர்தல் நடைபெறுவதுபற்றி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரைக்கும் மூன்று லோக்சபா வேட்பாளர்கள், 21 சட்ட சபை வேட்பாளர்கள் உட்பட பலர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தொடர்ந்து நிலவிவரும் வன்முறைச்சூழல் காரணமாக மாநிலத்தில் நடைபெறவிருந்த தேர்தலில் போட்டியிட்ட பல அரசியல் கட்சிகள் போட்டியிலிருந்து ஒதுங்கிக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (ரி)

# கப்பலில் வரும் மருந்துகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நிர்வாகத்தின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு, விசர்நாய்க்கடி தடுப்பு மருந்து திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வரவிருக்கும் கப்பலில் வந்துசேரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் முக்கூட்டுத் தடை மருந்துகளும் வருமென தெரிவிக்கப்படுகிறது. (153)

# இனப்பிரச்னை தீர்வுக்கு பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்க கோரிக்கை

கொழும்பு)

இனப்பிரச்னைக்கு உடனடியாக தீர்வுகாணபாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

அவசரகாலச்சட்டம் தொடர்பாக நடந்த விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விவாதத்தில் திரு. அத்தாவுட செனிவிரத்ன பேசுகையில்; வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதியிலும் அவசரகால சட்டத்தை நீக்குமாறு கோரினார். (சி)



வவுனியாவில் விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திய ஹெலிகொப்டரின் சிதைவுகளின் சில பகுதிகளை மேலேயுள்ள படங்களில் காணலாம் சுன்னாகம் சந்தையில் இந்த சிதைவுகள் பொதுமக்கள் பார்வைக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தன. [படங்கள்: தேவா]

## கொழும்பு பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## முப்படைகளும் உஷார் நிலையில்

இச்சம்பவம் நடைபெற்றபோது ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா கொழும்பிலிருக்கவில்லை. வெளியூரிலிருந்த அவருக்கு உடனே தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவர் உடனடியாக தலைநகர் திரும்பி முப்படைகளையும் உஷார் நிலையிலிருக்குமாறு உத்தரவிட்டார்.

குண்டுவெடித்த சிறிது நேரத்தில் அப்பகுதி முழுமையாக படையினரின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது. பல இடங்களிலும் வீதித்தடைகள் போடப்பட்டு கடும் சோதனையில் படையினர் ஈடுபட்டனர்

## கொழும்பு மாநகர் அதிர்ந்தது

மேஜர் ஜெனரல் ரஞ்சன் கொல்லப்பட்ட குண்டுவெடிப்பை அடுத்து நேற்று மீண்டும் கொழும்பு மாநகர் அதிர்ந்தது. பாரிய சத்தம் கேட்டதும் மாநகரம் பெரும் அல்லோல கல்லோலப்பட்டது. அரசு, தனியார் அலுவலகங்களும், வர்த்தக ஸ்தாபனங்களும் உடனடியாக மூடப்பட்டதாக 'றேடியோ ஆஸ்திரேலியா' தெரிவித்தது

## தொலைத்தொடர்பு மின்சாரம் பாதிப்பு

இக்குண்டு வெடிப்பால் சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சுற்றி மின்சாரம், தொலைத்தொடர்பு, நீர்வியோகம் முற்றாகப் பாதிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும்இராணுவ நடவடிக்கைக்கு இங்கிருந்தே முழு உத்தரவும் இடப்பட்டு வந்ததாக பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் தெரிவித்தார். இதுவரை இக்குண்டு வெடிப்புக்கு எவரும் உரிமை கோராதபோதும், விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது இதே கருத்தையே திரு. பிரட்மன் வீரக்கோனும் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களுக்கும் காயம்

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பாடசாலை மாணவர்கள் சிலரும் காயமடைந்தனர். கொழும்பு தேஸ்டன் கல்லூரி, றோயல் கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகிய 3 முக்கிய பாடசாலைகள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரே ரகமான குண்டுகள்

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொலைக்கு பயன்படுத்திய குண்டும் நேற்று நடைபெற்ற சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட குண்டும் ஒரே ரகமானவையென தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஒரு மாதகால இடைவெளியில்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைசெய்யப்பட்டு சரியாக ஒரு மாதகால இடைவெளியில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்திருக்கிறது.

## கேந்திர நிலையம் தகர்ந்தது

வடக்கு-கிழக்கில் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவநடவடிக்கைகளுக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதும், திட்டங்கள் தயாரிக்கபபடுவதும் மேற்படி பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைப் பிரிவே என்பதும் குறிப்பிடத்தக்கது

இக்கட்டிடத்தை தகர்க்கும் முயற்சியாகவே மேற்படி தற்கொலைப்படைத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### தற்கொலைப் படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றுமாலை தெரிவித்தது.

கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கை முழு அளவில் தயார் நிலையில் இருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [சி]

### யாழ். நகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் பரவலாக வாழும் பகுதிகளை நோக்கிப் பரவலாக நடாத்தப்பட்ட இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி தெரியவில்லை. (க)


## பின்போடப்பட்டுள்ளது

இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதான அரங்கில் நடைபெறவிருந்த

'மாபெரும் இசைமாலை நிகழ்ச்சி'

மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

சிரமத்திற்கு வருந்துகின்றோம்
லயன்ஸ் கழகம்
சாவகச்சேரி

குறிப்பு: இன்று இரண்டாம் பக்கத்தில் பிரசுரித்த விளம்பரத்தின் பிரகாரம் இசை மாலை நிகழ்ச்சி நடைபெறமாட்டாது.

(ஏ-1397)


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81

### இராசி பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கன்னி; அவசரப் போக்கு, அமைதியின்மை குடும்பப்பிரிவு

துலாம்; சுபகாரியம், பெண்களால்உதவி, விருந்துபசாரம்

விருச்சிகம்; அவமதிப்பு, பணச் செலவு, புத்திரர் கவலை

தனுசு; மனக்களிப்பு, வாழ்க்கைச் சுகம், அதிர்ஷ்டம்.

மகரம்: உல்லாசப் பயணம், சகோதரர் உதவி, கல்வி ஞானம்.

கும்பம்: மேலோர் சகாயம், காரியத் தடை, யோசனை மிகுதி.

மீனம்: தடுமாற்றம், தொழில் கேடு, வாக்குக் தவறுதல்.

- ஜோஸ்யர்

### வெலிஓயா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(பொன்னையா காசிநாதர், வாழைச்சேனை), 2-வது லெப். சின்னப்பர் (கனகராசா பிரமானந்தன், சுன்னாகம்), அண்ணாதுரை (ஐயாப்பிள்ளை-தவராசா, திருமலை), செல்வா (பொன்னம்பலம் விஜயன், மட்டக்களப்பு) ஆகிய போராளிகளுடன் லெப். பொன்னம்பலம் (துணைப்படை வீரர், கொக்குத்தொடுவாய்) வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்த போராளிகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். [க]

# ஹெலியை மக்கள் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் வவுனியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஹெலிகொப்டரின் சிதைந்த பாகங்கள், பொதுமக்களின் பார்வைக்காக, நேற்று சுன்னாகம் சந்தையில் வைக்கப்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளால் இந்த ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்ட சில நிமிடங்களின் பின்பு ஹெலி வீழ்ந்த இடத்துக்கு விரைந்த இரு பொம்மர் விமானங்கள் அந்த ஹெலியின் மீது மாறி மாறிக் குண்டுகளை வீசி அதனைச் சின்னாபின்னமாக்கியதனாலேயே இதன் பாகங்கள் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது

வவுனியா மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் புகழுடம்புகளும் பொதுமக்களின் அஞ்சலிக்காக சுன்னாகம் சந்தையின் உள் மண்டபத்தில் விசேடமாக சிவப்புக் கம்பளத்தால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்தன.

வீரவேங்கைகளின் புகழுடம்புகளுக்குத் தமது அஞ்சலியைச் செலுத்துவதற்கும், ஹெலியின் சிதைந்த பாகங்களைப் பார்ப்பதற்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் நீண்ட வரிசையில் நின்றனர் [வி-86]

### நரசிம்மராவ்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றுள்ளனர்.

இந்த புதிய அமைச்சரவையில் பிரதமர் உட்பட 15 கபினெட் அமைச்சர்களும், 14 தனிப்பொறுப்பு வகிக்கும் அமைச்சர்களும் 21 வேறு இணையமைச்சர்களும், 7 துணையமைச்சர்களும் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

### புலிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

ஏனைய தமிழ்க் குழுக்களை இலங்கைக்கு அனுப்பப்படமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். புலிகளை எவ்வாறு இனம்காண்பதென பொலிஸாருக்கு தெரியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 2 லட்சம் தமிழ் அகதிகளையும் வெளியேற்ற ஜெயலலிதா நடவடிக்கை எடுத்து வருவதாகவும் செய்தியாளர்கள்கள் தெரிவித்துள்ளனர்.

### பதவியேற்பு

தமிழகத்தின் முதல்வராக செல்வி ஜெயலலிதா நாளை மறுதினம்திங்கட்கிழமை பதவியேற்கவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [சி]

### வீரவணக்கம்

வவுனியாமோதலில் வீரமரணமடைந்த போராளிகள் விபரம் வருமாறு; கப்டன் விஜி (ந. கனகசபாபதி-பூநகரி), லெப். சுதா (வைத்தியலிங்கம் பரமலிங்கம்-அராலி) 2வது லெப். காஸ்ரோ (குமாரலிங்கம் விமலராசா - முல்லைத்தீவு), தினேஷ் (பா. தவீந்திரன், மட்டக்களப்பு), பசிலோன் (ந. உதயகிருஷ்ணன், யாழ்ப்பாணம்], பாரதி (த. திவாகரன், காரைநகர்) ஆகிய போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

தமிழீழ மண்மீட்புப் போரில் தமது இன்னுயிரை அர்ப்பணித்த வீரவேங்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தெரிவிக்கின்றனர். [க]

### பேச்சுவார்த்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்படுமென திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.


## மரண அறிவித்தல்

### திருமதி கிறேஸ் தம்பையா

(இளைப்பாறிய ஆசிரியை)

இருபாலை, கோப்பாய் தெற்கைச் சேர்ந்த திருமதி கிறேஸ் தம்பையா 19-6-91ல் காலமானார். இவர் காலஞ்சென்ற விரிவுரையாளர் திருஞானசுந்தரம் தம்பையாவின் அன்பு மனைவியும், மேசி, ஞானேந்திரன், ஞானசூரியம், தங்கராணி, ஜெயசுந்தரம், ஞானசௌந்தரி, ஞானவதனி, ஞானக்குமார், ஞானராணி, ஞானராஜன், ஞானரூபினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கிளறன்ஸ், ஞானசீலி, சுவர்க்கமலர், ஷெறீன், அரியறட்னம், மகிழ்ராஜன், நிதி, ஆனந்தா, ஷாமினி, அஜந்த் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 24-6-91 திங்கட்கிழமை பி. ப. 3 மணிக்கு பேராதனையிலுள்ள 154, குருந்தோவித்தை வீதி இல்லத்திலிருந்து கிடவை புனிதயோவான் தேவாலய சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி
ஞானசௌந்தரி அரியறட்னம்

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(சி-4891)